செய்திப் பணிப்பாளர் /செய்தி ஆசிரியர் 21.09.2018

# செய்தி வெளியீடு

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(அடிப்படை 2013=100): ஆகஸ்ட் 2018

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**
**தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு**

தொலைபேசி: 011-2147414 தொலைநகல்: 011-2877945 மின்னஞ்சல் prices@statistics.gov.lk

2018 ஆகஸ்ட் மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) பற்றிய அறிக்கையை வெளியிடுகையில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் அவர்கள், தே.நு.வி.சு.அடிப்படையான வருடத்தின் மீது வருட பணவீக்கமானது 2.5% ஆக கணக்கிடப்பட்டுள்ளது என தெரிவித்தார். 2018 யூலை மாதத்தில் பதிவாகிய பணவீக்கம் 3.4% ஆக இருந்தது. 2018 ஆகஸ்ட் மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்கத்திற்கான பங்களிப்புகள் முறையே -0.01%, 2.57% ஆக இருந்த அதேவேளை, 7.9% முதன்மைப் பணவீக்கத்தின் பெறுபேறாக 2017 ஆகஸ்ட் மாதத்தில் பணவீக்கத்திற்கான இந்த இரு பிரிவுகளிலினதும் பங்களிப்புகள் முறையே 5.3%, 2.7% ஆக காணப்பட்டன.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிடுகையில் 2018 யூலை மாதத்தில் பதிவாகிய 126.6 இருந்து 2018 ஆகஸ்ட் மாதத்தில் 125.4 ஆக குறைவடைந்துள்ளது. இது, 2018 யூலை மாதத்துடன் ஒப்பிடுகையில் 2018 ஆகஸ்ட் மாதத்தில் 1.2 சுட்டெண் புள்ளிகள் அதாவது 0.9 சதவீதப் புள்ளி குறைவொன்றைக் காட்டுகிறது. இந்த மாதம் மீது மாத மாற்றத்திற்கான காரணம், உணவுப்பொருட்களின் செலவுப் பெறுமதி 1.31%ஆல் குறைவடைந்தமையும் உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதி 0.40%ஆல் அதிகரித்தமையுமாகும்.

உணவுப்பொருட்களின் குறைந்த செலவுப் பெறுமதிகள் மரக்கறி, தேங்காய், பச்சை மிளகாய், புதிய மீன், சின்ன வெங்காயம், அரிசி, எலுமிச்சம்பழம், மைசூர் பருப்பு, வெள்ளைப்பூடு, உருளைக்கிழங்கு, சீனி, இஞ்சி, மிளகாய்த்தூள் மற்றும் கடலை என்பன பொருட்டு பதிவாகின. எனினும், உணவுப்பொருட்களின் அதிகரித்த செலவுப் பெறுமதிகள் பப்பாசிப்பழம், முட்டை, மாம்பழம், பால்மா, வாழைப்பழம், கருவாடு, கோழி இறைச்சி, அண்ணாசிப்பழம் மற்றும் தேயிலைத்தூள் என்பன பொருட்டு பதிவாகின.

முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2018 ஆகஸ்ட் மாதத்தில் உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதியின் அதிகரிப்புக்குக் காரணம், ‘அற்ககோல் பானங்கள், புகையிலை மற்றும் தியக்கமருந்துகள்’, ‘போக்குவரத்து’, ‘வீடமைப்பு, நீர், மின்வலு, எரிவாயு, ஏனைய எரிபொருள்கள்’ ‘தளபாடம், குடித்தன உபகரணம் மற்றும் வழமையான குடித்தன பராமரிப்பு’, ‘நானாவிதப் பொருட்களும் சேவைகளும்’, ‘பொழுதுபோக்கும் கலாசாரமும்’, ‘உணவகமும் ஹோட்டல்களும்’ மற்றும் ‘ஆடையும் காலணியும்’ ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட செலவுப் பெறுமதியின் அதிகரிப்பேயாகும். இருப்பினும், முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் ‘சுகாதாரம்’ பிரிவு பொருட்டு செலவுப் பெறுமதியில் குறைவு பதிவாகியது. அதேநேரம், ‘தொடர்பாடல்’ மற்றும் ‘கல்வி’ ஆகிய பிரிவுகளின் செலவுப் பெறுமதிகள் இம்மாதத்தில் மாற்றமின்றி காணப்பட்டன.




தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)

| வருடம் | மாதம் | சுட்டெண் | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | புள்ளிக்கு புள்ளி பணவீக்க% |
|---|---|---|---|---|
| **2017** | ஒகஸ்ட் | 122.3 | -0.1 | 7.9 |
| | செப்ரெம்பர் | 123.3 | 0.8 | 8.6 |
| | ஒக்ரோபர் | 124.8 | 1.2 | 8.8 |
| | நவம்பர் | 126.4 | 1.3 | 8.4 |
| | டிசம்பர் | 126.6 | 0.2 | 7.3 |
| **2018** | ஜனவரி | 125.8 | -0.6 | 5.4 |
| | பெப்ரவரி | 123.7 | -1.7 | 3.2 |
| | மார்ச் | 122.8 | -0.7 | 2.8 |
| | ஏப்ரல் | 122.9 | 0.1 | 1.6 |
| | மே | 124.3 | 1.1 | 2.1 |
| | யூன் | 126.5 | 1.8 | 2.5 |
| | யூலை | 126.6 | 0.1 | 3.4 |
| | ஒகஸ்ட் | 125.4 | -0.9 | 2.5 |

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்